ஸ்ரீ ராமஜெயம்.

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!
ஹரே க்ருஷ்ண  ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!

## ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் ஆலயம்

சைதன்யபுரம் (எ) சேதினிபுரம்
குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்

# ஸ்ரீ சீதா கல்யாண மஹோத்ஸ்வம்



**நாள் : 04.04.2026 - 05.04.2026**
**சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை**

ஸ்ரீ ராமஜெயம்.

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!

# ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் ஆலயம்

சைதன்யபுரம் (எ) சேதினிபுரம்
குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்

# பக்தகோடிகளே!

"சைதன்யபுரம்" என்னும் சேதினிபுரம் அழகான கிராமம் ஆகும். ஊரைச் சுற்றி சிவ, விஷ்ணு, கிராம தேவதைகள் ஆலயங்கள் இவ்வூரில் அமைந்துள்ளது. அக்ரஹாரத்தின் கிழக்கே உள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் "மனோகாரக" ஷேத்ரமாகும். இத்திருக்கோயிலில் அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட மனவியாதிகள் நீங்கும் என்பது ஐதிகம். இவ்வூரில் "ஸ்ரீ யாக்ஞவல்க்ய மகரிஷி" உபதேசித்த ஸ்ரீ சுக்ல யஜுர் வேதத்தை சார்ந்தவர்கள் வசித்து வருகின்றனர். பல மகான்கள் தபஸ்செய்து இவ்வூரில் சித்தியடைந்து உள்ளனர். வேதம், வேதகுருக்குலம், நாமசங்கீர்த்தனம் தழைத்த கிராமம் ஆகும். ஸ்ரீஸ்ரீ காஞ்சி மஹாபெரியவாள், பால பெரியவாள், சின்னான் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ண பிரேமி சுவாமிகள், ஸ்ரீஸ்ரீ மஹாரண்யம் முரளிதர சுவாமிகள் இவ்வூருக்கு விஜயம் செய்து அருளாசி வழங்கியுள்ளனர்.

இவ்வூர் நதியின் வடகரையில் தெய்வக்குழந்தை திருவண்ணாமலை "ஸ்ரீ யோகிராம் சுரத்குமார்" மஹானுக்கு நாமாலயம் அமைத்து நித்திய பூஜை, வார நாம பஜனை, அன்னதானம் மற்றும் ஜெயந்தி உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இவ்வூர் ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் கோவிலில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்ரீ சீதா கல்யாண உற்சவம் நடைபெற்று வருகிறது. பிரதி வருஷம் போல் இவ்வாண்டும் உற்சவம் வரும் பங்குனி 21 மற்றும் 22 (ஏப்ரல் 4 & 5) 2026 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சைதன்யபுர ஆஸ்திக சமாஜ் மூலம் சென்னை "ஸ்ரீ குருஜி க்ருபாமண்டலி" ஸ்ரீவாஞ்சியம் ஸ்ரீ முரளிதர பாகவதர் குழுவினரால் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலில்படி ஸ்ரீ பகவத் க்ருபையாலும் ஸ்ரீ குரு க்ருபையாலும் நிச்சியிக்கப்பட்டு உள்ளது. ஆஸ்திக மஹா ஜனங்கள் அனைவரும் இந்த உற்சவத்தில் கலந்து கொண்டு இறையருளை பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
**ஸ்ரீ சைதன்யபுர ஆஸ்திக சமாஜ்**
சேதனிபுரம்

## நிகழ்ச்சி நிரல்

**04.04.2026 சனிக்கிழமை**

காலை 8.30 - 1.00 மணி - ஸம்ப்ரதாய பஜனை & அஷ்டபதி
மாலை 4.00 - 6.00 மணி - அஷ்டபதி தொடர்ச்சி
மாலை 6.30 - 7.00 மணி - விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம்
இரவு 8.00 - 12.00 மணி - தரங்கம், பஞ்சபதி பூஜை, தியானங்கள், திவ்ய நாமம் & டோலோத்ஸவம்

**05.04.2026 ஞாயிற்றுக்கிழமை**

காலை 7.00 மணிக்கு உஞ்சவ்ருத்தி
காலை 9.00 - 1.00 மணி - ஸ்ரீ சீதா கல்யாண உற்சவம்
மாலை 6.00 மணி - பெருமாள் திருவீதி உலா காட்சி

இரவு 9.00 - மறுநாள் விடியற்காலை 5.30 மணிவரை
வஸந்த கேளிக்கை, பவ்வளிம்பு & ஸ்ரீ ஆஞ்சநேய உற்சவம்.

மங்களம்

சுபம்!







**நன்கொடைகள்**
**வழங்க இந்த QR Code**
**பயன்படுத்தவும்..**